www.Padasalai.Net www.TrbTnpsc.com

| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | 10ஆம் வகுப்பு | |
|---|---|---|
| தமிழ் | மதிப்பெண்கள் 100 | நேரம் 3.00 மணி |

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. YouTube/ Akwa Academy 15 x 1 = 15

1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .........
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
2. ``*மருந்தே ஆயினும் விருந்தொடு உண்*'' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
   அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன் இ) திருக்குறள் ஈ) நற்றிணை
3. `*செல்வத்துப் பயனே ஈதல்*' – என்று கூறியவர்
   அ) கபிலர் ஆ) அவ்வையார் இ) நக்கீரனார் ஈ) மாங்குடி மருதனார்
4. `*எந்தமிழ்நா*' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் –
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
5. உலக காற்று நாளாக் கொண்டாடப்படும் தினம்
   அ) ஜுன் 15 ஆ) ஜுன் 16 இ) ஜுன் 5 ஈ) ஜுலை 15
6. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
   அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
   இ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
7. `*வெற்றி வேற்கை*' என்றழைக்கப்படும் நூல் எது?
   அ) எட்டுத்தொகை ஆ) நறுந்தொகை இ) திருத்தொண்டர் தொகை ஈ) நைடதம்
8. `*எற்பாடு*' என்பது .........
   அ) ஞாயிறு உதிக்கும் நேரம் ஆ) ஞாயிறு மறையும் நேரம் இ) நண்பகல் நேரம் ஈ) நடுஇரவு நேரம்
9. `*இவள் தலையில் எழுதியதோ, கற்காலம் தான் எப்போதும்*' ..... இவ்வடிகளில் கற்காலம் என்பது
   அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது
10. `*ஆடு*' என்பதன் கூட்டப்பெயர்.........
   அ) கூட்டம் ஆ) மந்தை இ) நிரை ஈ) குவியல்
11. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

*தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !*
*இன்னறும் பாப்பத்தே ! எண்தொகையே நற்கணக்கே !*
*மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !*

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் .........
   அ) தென்மொழி ஆ) கனிச்சாறு இ) நூறாசிரியம் ஈ) காற்றே வா
13. இப்பாடலின் ஆசிரியர் அ) பாரதியார் ஆ) க.சச்சிதானந்தன் இ) பாவலரேறு ஈ) சந்தக் கவிமணி
14. இப்பாடலில் கவிஞர் `தென்னன்' என்று யாரைக் குறிப்பிடுகிறார்?
   அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்
15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள சீர்மோனை
   அ) தென்னன், இன்னறும் ஆ) மன்னுஞ், முன்னும் இ) முன்னும், நினைவால் ஈ) முன்னும், முடிதாழ

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 21 கட்டாய வினா 4 x 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
   அ) உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே.
   ஆ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாத் திகழ்பவை நிகழ்கலைகள்
17. வெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
18. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
19. குறிப்பு வரைக : அவையம்



Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

21. *'பொருள்'* என முடியும் குறளை எழுதுக.

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.** 5 x 2 = 10

22. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரை இணைக்க.

*நேற்று என்னைச் சந்தித்தார் ; அவர் என் நண்பர்.*

23. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடரை முழுமை செய்க.

*பசுமையான .........ஐக் .......... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)*

24. பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

அ) உழவர்கள் மலையில் உழுதனர் ஆ) முல்லை பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்

25. தீவக அணியின் வகைகள் யாவை?

26. பகுபத உறுப்பிலக்கணம் தருக. *அறியேன்*

27. கலைச் சொல் எழுதுக. அ) *Patent* ஆ) *Nanotechnology*

28. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக. அ) திருநெல்வேலி ஆ) புதுச்சேரி

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** 2 x 3 = 6

29. *``புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது''.* இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துகாட்டுகள் தருக.

31. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும், வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலி வேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ, ஆடுவர். புலியைப் போன்று நடந்தும், பதுங்கியும், பாய்ந்தும் எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப் பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

அ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் நிகழ்கலை எது?

ஆ) புலி ஆட்டம் ஆடுவோர் எத்தகைய அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்?

இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 34 கட்டாய வினா** 2 x 3 = 6

32. மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக. அ) *`தூசும் துகிரும்'* எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல் (அல்லது)

ஆ) *`அருளைப் பெருக்கி'* எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல்

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.** 2 x 3 = 6

35. மூவகை மொழிகளை எடுத்துகாட்டுகளுடன் விளக்குக.

36. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது* – இதில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. அலகிட்டு வாய்பாடு தருக. *கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய*
*கோடிஉண் டாயினும் இல்.*

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 x 5 = 25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.


39. அ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் *``உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்''* என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.



Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கடலூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று வரும் தமிழழகன் மகள் சுந்தரி இறகுப்பந்து விளையாட்டில் சிறந்து விளங்குகிறாள். தேர்வர் தன்னை சுந்தரியாக கருதி கீழ்க்கண்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

---

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்ப படிவம்

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் : மாணவரின் கையெழுத்து

தேதி :
இடம் :

பெற்றோர் / பாதுகாவலர் கையெழுத்து



Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
www.Padasalai.Net

42. அ) தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.

Malar : Devi, switch off the lights when you leave the room.
Devi : Yeah. We have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power! .

(அல்லது)

ஆ) தொலைக்காட்சி, திறன்பேசி, காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் உன் நண்பனை எவ்வாறு நெறிப்படுத்துவாய்? YouTube/ Akwa Academy

VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் – அருகி வருவதற்கான காரணங்கள் – வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – பற்றி நாளிதழுக்கான தலையங்கள் எழுதுக.

44. அ) *``அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்"* என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. (அல்லது).

ஆ) அழகிரிசாமியின் *`ஒருவன் இருக்கிறான்'* சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. *முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.*

---



Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com